இருந்தாலும், அந்த நீர் ஆதாரம் இப்பொழுது குறைந்திருக்கின்ற காரணத்தினால் அங்கே மேலும் நீர் வேண்டுமென்ற உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அங்கே மேலும் கைப்பம்புகளைப் போட முடியுமா என்பதைப்பற்றியும் அல்லது தாமிரபரணி ஆற்றிலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகக் குடிநீர் வருகின்றபொழுது அந்த இடத்தையும் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதையும் பரிசீலித்து இந்த அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.55 மணி

திரு. பி எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாகுடி அருகில் நல்லம்தட்டை என்ற ஒரு ஊரில் இருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தயாரித்து சங்கரன் கோவில் ஆலங்குளம் பகுதிக்கு ஒரு திட்டத்தை வகுத்து இருப்பதாக அறிகின்றேன். அப்படி திட்டத்தை நிறைவேற்றும்போது, மருதமுத்தூர், ஓடக்கரை, துலுக்கப்பட்டி, குமாரசாமிபுரம், காத்தபுரம், ஓடைமரிச்சான் பெயர்களை எல்லாம் அமைச்சர் அவர்களிடத்திலே ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கண்டப்பட்டி, புதுப்பட்டி, காசிநாதபுரம், இடைக்கால், காலத்திமடம், பொல்லக்கால், பொதுக்குடி, ஆல்வார், துலுக்கப்பட்டி, பாறையாங்குறிச்சி, அடைச்சாணி போன்ற கிராமங்கள்.... ..(மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதியில் இத்தனை ஊர்கள்தானா? இன்னும் இருக்கிறதா?

திரு. பி.எச். பாண்டியன் : அத்துணை ஊர்களுக்கும். தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரை, கட்டிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் ஏற்றி வழங்குவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ச. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசி அரசினர் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்குப் புதிதாக கட்டிடம் கட்டுதல்.

*2952 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்காசி அரசினர் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு புதிதாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தென்காசி தாலுக்காவில் அரசின் மாவட்டத் தலைமை மருத்துவமனை புதிதாக கட்டுவதற்கானத் திட்டம் அரசிட மிருக்கிறது.

(ஆ) கட்டிடம் கட்ட நிலம் தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி நகரத்திலே தற்போது இயங்கி வருகின்ற மாவட்டத் தலைமை மருத்துவமனையில் நோயாளிகள் இட நெருக்கடியால் அவதிப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். நோயாளிகள் அதிக அளவு வந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, மருத்துவர்களே அதிகமான அவதிக்குள்ளா கின்றனர். இந்த நிலைமையைக் கருத்திலே கொண்டு மிக விரைவிலே மாவட்டத் தலைமை மருத்துவமனையை ஏற்படுத்து வதற்காகத் தேவையான நிலத்தை கையகப்படுத்துமா, மிக விரைவிலே மருத்துவமனையை அமைத்துக் கொடுக்குமா என்பதை அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையைக் கட்டுவதற்காக 50.30 ஏக்கர் நிலம், நிலம் எடுப்பு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதை இந்த அரசு விரைவுபடுத்தும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட மருத்துவமனை புதிதாகக் கட்டுவதற்காக இதுவரையிலும் எவ்வளவு பண ஒதுக்கீடு மொத்தமாகச் செய்யப்பட்டிருக்கின்றது? அந்த மருத்துவமனைக் குரிய இடங்கள் எல்லாம் கையகப்படுத்துவதற்காக ஆணைகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா? அது இந்த ஆண்டிலே முடிவடைந்து விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலங்களைக் கையகப்படுத்த நில உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.20,92,450 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக நிலத்தை, இச்செலவில் நில ஆர்ஜிதம் மூலமாக எடுக்கலாமா என்ற கொள்கை முடிவு எடுக்கும் கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.